செய்தி வெளியீடு எண். 19-2018 நாள்: 10.01.2018

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2018 பணிகள் முடிக்கப்பட்டு, இறுதி வாக்காளர் பட்டியலை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.01.2018) வெளியிட்டார்.

*****

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப்பணியின்கீழ் 01.01.2018-ஐ தகுதி ஏற்பு நாளாக கொண்டு 03.10.2017 முதல் 31.10.2017 வரையிலும் மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு பணி (Special Drive) 01.11.2017 முதல் 15.12.2017 வரையிலும் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சேர்க்கவும், நீக்கம் செய்திடவும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் பெறப்பட்ட மனுக்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளிடையே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விழுப்புரம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்களால் இன்று (10.01.2018) வெளியிடப்பட்டது.

1) படிவம் 6-ல் பெறப்பட்ட மொத்த மனுக்கள் - **31,764**
2) 18 வயதை அடையாதவர்கள், கொடுத்த முகவரியில் குடியில்லாதவர்கள்,தகுதியற்றவை போன்றவற்றால் “தள்ளுபடி” செய்யப்பட்டவை - **2,378**
--------------------
3) தற்போது வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட தகுதியான நபர்கள் - **29,386**
--------------------

**<u>சுருக்கம்</u>**

| வ. எண். | விபரம் | ஆண்கள் | பெண்கள் | இதரம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1) | 03.10.2017 தேதியில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை | 1347001 | 1352836 | 387 | 2700224 |
| 2) | **<u>நீக்கம்:</u>** படிவம் 7 மூலம் பெயர் நீக்கம் கோரியவர்கள், இறந்தவர்கள், குடிபெயர்ந்தவர்கள், இரண்டு இடங்களில் பெயர் உள்ளவர்கள் ஆகியவை நீக்கப்பட்ட எண்ணிக்கை | 27542 | 34427 | 13 | 61982 |
| 3) | **நிகரம்** | 1319459 | 1318409 | 374 | 2638242 |
| 4) | **<u>சேர்ப்பு:</u>** தற்போது சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தின்படி சேர்க்கப்பட்டவர்கள் | 14188 | 15193 | 5 | 29386 |
| 5) | 10.01.2018 தேதியில் உள்ள மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை | **1333647** | **1333602** | **379** | **2667628** |

அனைத்து சட்டமன்ற தொகுதியிலும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்டதற்கு பின் தற்போதுள்ள மொத்த வாக்காளர் விவரம் பின்வருமாறு:-

| எண்சட்டமன்ற தொகுதி | மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை | ஆண் | பெண் | இதரம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 70. செஞ்சி | 304 | 125551 | 127520 | 32 | 253103 |
| 71. மைலம் | 265 | 106239 | 105800 | 16 | 212055 |
| 72. திண்டிவனம் (தனி) | 263 | 109728 | 112191 | 5 | 221924 |
| 73. வானூர் (தனி) | 277 | 108683 | 111187 | 17 | 219887 |
| 74. விழுப்புரம் | 282 | 122768 | 127321 | 55 | 250144 |
| 75. விக்கிரவாண்டி | 275 | 110313 | 110699 | 24 | 221036 |
| 76. திருக்கோவிலூர் | 285 | 122183 | 119893 | 40 | 242116 |
| 77. உளுந்தூர்பேட்டை | 337 | 140953 | 136986 | 44 | 277983 |
| 78. ரிஷிவந்தியம் | 305 | 126724 | 121670 | 56 | 248450 |
| 79. சங்கராபுரம் | 300 | 126223 | 125982 | 39 | 252244 |
| 80. கள்ளக்குறிச்சி (தனி) | 330 | 134282 | 134353 | 51 | 268686 |
| மொத்தம் | 3223 | 1333647 | 1333602 | 379 | 2667628 |

**வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடங்கள் விபரம்.**

1. மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம்.
2. வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் /சார் ஆட்சியர் அலுவலகங்கள்
3. உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள்
4. உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நகராட்சி அலுவலகங்கள்
5. நியமன வாக்குசாவடி அமைவிடங்கள்

பொதுமக்கள் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சரிபார்த்துக் கொள்ளலாம். இது தவிர வாக்காளர் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள பதிவு பெற்ற இணையதள தேடல் மையங்களின் மூலமாகவும், இந்திய தேர்தல் ஆணையம் இணையதளம் (www.nvsp.in) ஆன்லைன் மூலமாகவும் வாக்களர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட விவரம் சரிபார்த்துக்கொள்ளலாம்.

புதியதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டவர்களுக்கு வருகிற 25.01.2018 அன்று தேசிய வாக்காளர் தினத்தில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (B.L.O) வண்ண வாக்காளர் புகைபட அடையாள அட்டை (PVC EPIC Card) வழங்கப்படும்.

2018 வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த பணி 11.01.2018 முதல் தொடர்ந்து நடைபெறும். பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம், இடமாறுதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட வாக்களர் பதிவு அலுவலகங்கள் / உதவி வாக்களர் பதிவு அலுவலகங்கள் / சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களிடம் நேரிடையாக விண்ணப்பங்கள் அளிக்கலாம். இதுதவிர பொதுமக்கள் இணையதளம் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். இணையதள முகவரி- (www.nvsp.in) மேலும்

பொதுமக்கள் விவரங்கள் பெற விரும்புவோர்கள் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் வாக்காளர் சேவை மைய **(Toll Free Number)** இலவச தொலைபேசி எண் **04146-251900**க்கு தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

தேர்தல் ஆணைய அனுமதியின்படி அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் வாக்காளர் பட்டியல் குறுந்தகடு பெற விரும்புபவர்கள் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு தொகை ரூ.100/- மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செலுத்தியும் மற்றும் வாக்காளர் பட்டியல் நகல் பெற விரும்புவோர் ஒரு பக்கத்திற்கு தொகை ரூ.2/- சம்மந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தியும் சான்றிடப்பட்ட வாக்காளர் பட்டியல் நகல் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூட்டத்தில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ரா.பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.கே.இராஜேந்திரன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சரஸ்வதி, தனிவட்டாட்சியர்(தேர்தல்) திரு.வீ.வெற்றிவேல் ஆகியோர் உடனிருந்தனர். மேலும் 2018 வாக்காளர்பட்டியல் தொடர்திருத்தபணி நடைபெறுவதற்கு பொதுமக்களும் அரசியல் கட்சிபிரதிநிதிகளும் முழு ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில், அ.இ.அ.தி.மு.க. நகர செயலாளர் திரு.பாஸ்கரன், தி.மு.க. மாவட்ட பொருளாளர் திரு.புகழேந்தி, பா.ஜ.க. மாவட்ட செயலாளர் திரு.சுகுமார், காஸ்கிரஸ் மத்திய மாவட்ட பொது செயலாளர் திரு.தனசேகர், தே.மு.தி.க. நகர செயலாளர் திரு.மணிகண்டன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட குழு உறுப்பினர் திரு.புருஷோத்தமன், பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட தலைவர் திரு.கருஞ்சிறுத்தை கலியமூர்த்தி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.